சிறப்பு மாவட்ட நீதிமன்றம், (இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை.
முன்னிலை திருமதி.N. நாகலெட்சுமி, எம்., பி.எல்.,
சிறப்பு மாவட்டநீதிபதி, மதுரை.
2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ம் நாள் செவ்வாய்கிழமை
எம்.சி.ஓ.பி.எண்.1326/2023
**CNR.No.TNMD0D-000998-2023**
மற்றும்
எம்.சி.ஓ.பி.எண்.1337/2023
**CNR.No.TNMD0D-001020-2023**
மற்றும்
எம்.சி.ஓ.பி.எண்.1143/2023
**CNR.No.TNMD0D-000838-2023**

**எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 : -**

மதுரை மாவட்டம், வண்டியூர், ஜெ.ஜெ.நகர், எண்.5/509 என்ற விலாசத்தில் வசிக்கும் சின்னதுரை அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 39 உள்ள உமா ...மனுதாரர்

/எதிராக/

1.சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை, மூவேந்தர் தெரு, எண்.6ஏ என்ற விலாசத்தில் வசிக்கும் கரம்பகோன் அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 45 உள்ள பெரியபாண்டி

2.மதுரை, கொல்லம்பட்டறை தெரு, எண்.19 என்ற விலாசத்தில் வசிக்கும் மைதீன் அவர்களின் குமாரர் அசன்பாவா

3.மதுரை மாவட்டம், தும்பபட்டி, ரெங்கசாமி அய்யர் தெரு, எண்.6பிஎன்ற விலாசத்தில் வசிக்கும் கணபதி அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 44 உள்ள ஆனந்தகிருஷ்ணன்

4.மதுரை, பைபாஸ் ரோடு, பொன்மேனி, சந்திரகாந்தி நகர், 2வது தளம், எண்.82 என்ற விலாசத்தில் இயங்கி வரும் Iffco Tokio General Insurance Co., Limited அதன் மேலாளர் மூலமாக.

5.மதுரை மாவட்டம், காளவாசல், திண்டுக்கல் NH ரோடு, எண்.3 என்ற விலாசத்தில் இயங்கிவரும் சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் மேலாளர் மூலமாக. ... எதிர்மனுதாரர்கள்

**எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 :-**

1.மதுரை மாவட்டம், ஆண்டார்கொட்டாரம், களஞ்சியம் நகர், கதவு

எண்.4/17 என்ற விலாசத்தில் வசிக்கும் ராமன் அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 61 உள்ள முருகன் என்ற முருகேசன்

2.மதுரை மாவட்டம், ஆண்டார்கொட்டாரம், களஞ்சியம் நகர், கதவு எண்.39 என்ற விலாசத்தில் வசிக்கும் மணி அவர்களின் மனைவிஇந்து வயது சுமார் 41 உள்ள செல்வி

3.மதுரை மாவட்டம், வண்டியூர், ஜெ.ஜெ.நகர், கதவு எண்.5/509 என்ற விலாசத்தில் வசிக்கும் சின்னதுரை அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 39 உள்ள உமா

4.மதுரை மாவட்டம், ஆண்டார்கொட்டாரம், களஞ்சியம் நகர், கதவு எண்.4/17 என்ற விலாசத்தில் வசிக்கும் ராஜேந்திரன் அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 37 உள்ள கவிதா ... மனுதாரர்கள்

/எதிராக/

1.சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை, மூவேந்தர் தெரு, எண்.6ஏ என்ற விலாசத்தில் வசிக்கும் கரம்பகோன் அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 45 உள்ள பெரியபாண்டி

2.மதுரை, கொல்லம்பட்டறை தெரு, எண்.19 என்ற விலாசத்தில் வசிக்கும் மைதீன் அவர்களின் குமாரர் அசன்பாவா

3.மதுரை மாவட்டம், தும்பபட்டி, ரெங்கசாமி அய்யர் தெரு, எண்.6பி என்ற விலாசத்தில் வசிக்கும் கணபதி அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 44 உள்ள ஆனந்தகிருஷ்ணன்

4.மதுரை, பைபாஸ் ரோடு, பொன்மேனி, சந்திரகாந்தி நகர், 2வது தளம், எண்.82 என்ற விலாசத்தில் இயங்கி வரும் Iffco Tokio General Insurance Co., Limited அதன் மேலாளர் மூலமாக.

5.மதுரை மாவட்டம், காளவாசல், திண்டுக்கல் NH ரோடு, எண்.3 என்ற விலாசத்தில் இயங்கிவரும் சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் மேலாளர் மூலமாக. ... எதிர்மனுதாரர்கள்

**<u>எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 :–</u>**

1.தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சுருளிபட்டி, பிள்ளையார்கோவில் தெரு, கதவு எண்.122/16 என்ற விலாசத்தில் வசிக்கும் கணேசன் அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 33 உள்ள கனிமெழி

2.மதுரை மாவட்டம், கருப்பபிள்ளையேந்தல், ஆண்டார்கொட்டாரம், களஞ்சியம் நகர், கதவு எண்.4/63 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட்.ராமசந்திரன்அவர்களின்மகன் இந்து வயது சுமார் 31 உள்ள தமிழ்செல்வன்

3.மதுரை மாவட்டம், கருப்பபிள்ளையேந்தல், ஆண்டார்கொட்டாரம்,

களஞ்சியம் நகர், கதவு எண்.4/63 என்ற விலாசத்தில் வசிக்கும்லேட்.ராமசந்திரன்அவர்களின்மகன் இந்து வயது சுமார் 31உள்ள தினேஷ் குமார் ...மனுதாரர்கள்

/எதிராக/

1.சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை, மூவேந்தர் தெரு, எண்.6ஏ என்ற விலாசத்தில் வசிக்கும் கரம்பகோன் அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 45 உள்ள பெரியபாண்டி

2.மதுரை, கொல்லம்பட்டறை தெரு, எண்.19 என்ற விலாசத்தில் வசிக்கும் மைதீன் அவர்களின் குமாரர் அசன்பாவா

3.மதுரை மாவட்டம், தும்பபட்டி, ரெங்கசாமி அய்யர் தெரு, எண்.6பிஎன்ற விலாசத்தில் வசிக்கும் கணபதி அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 44 உள்ள ஆனந்தகிருஷ்ணன்

4.மதுரை, பைபாஸ் ரோடு, பொன்மேனி, சந்திரகாந்தி நகர், 2வது தளம், எண்.82 என்ற விலாசத்தில் இயங்கி வரும் Iffco Tokio General Insurance Co., Limited அதன் மேலாளர் மூலமாக.

5.மதுரை மாவட்டம், காளவாசல், திண்டுக்கல் NH ரோடு, எண்.3 என்ற விலாசத்தில் இயங்கிவரும் சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் மேலாளர் மூலமாக. ... எதிர்மனுதாரர்கள்

இம்மூன்று மனுக்களும் என் முன்பாக 07.08.2025−ம் தேதி அன்று இறுதி விசாரணைக்கு வர பெற்று இம்மூன்று மனுக்களில் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இம்மூன்று மனுக்களின் 4−ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A. தர்மராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 5−ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சைலப்ப கல்யாண் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனு தாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜரிண்மையால் ஒருதலைப்பட்ச மாக்கப்பட்ட நிலையிலும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங் களைப் பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து,

இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>பொதுவான உத்தரவு</u>**

**<u>எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 :–</u>**

இம்மனுவின் மனுதாரர் சாலை விபத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் **161, 141, 142, 163**பி, **166** மற்றும் **182**ஏ**–**ன் படியும், திருந்திய சட்டம் **54/1994–**ன் படியும், **r/w** விதி **3(1)–**ன் கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 :–</u>**

இம் மனுவின் மனுதாரர்கள் இறந்து போன காமாட்சி என்பவரின் சாலை விபத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் **161, 141, 142, 163**பி, **166** மற்றும் **182**ஏ**–**ன் படியும், திருந்திய சட்டம் **54/1994–**ன் படியும், **r/w** விதி **3(1)–**ன் கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 : –</u>**

இம் மனுவின் மனுதாரர்கள் இறந்து போன வாணி என்பவரின் சாலை விபத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் **164, 163**பி, **166** மற்றும் **182**ஏ**–**ன் படியும், திருந்திய சட்டம் **32/2019–**ன் படியும், **r/w** விதி **3(1)–**ன் கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>2. எம்.சி.ஓ.பி.எண்கள்.1326, 1337 மற்றும் 1143/2023 மனுக்களின் சுருக்கம் : –</u>**

எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 இம் மனுவில் மனுதாரர் உமா என்பவர் இறந்து போன காமாட்சி என்பவரின் மகள் ஆவார்.

எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 இம் மனுவில் 1-ம் மனுதாரர் இறந்து போன காமாட்சி என்பவரின் கணவர் ஆவார். அவர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார். 2 முதல் 4 மனுதாரர்கள் இறந்து போன காமாட்சி என்பவரின் மக்கள் ஆவார். எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 இம் மனுவில் 1 முதல் 3 மனுதாரர்கள் இறந்து போன வாணி என்பவரின் மக்கள் ஆவார். இம்மூன்று மனுக்களும் ஒன்றாக நடத்தக்கோரி மனுதாரர் கள் தரப்பில் கூட்டுக் குறிப்பாணை 27.01.2025-ம் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்டு, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என மேற்குறிப்பு செய்ததன் அடிப்படையில் எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 மனு வில் சாட்சி கள் விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளது.

இம் மூன்று மனுக்களில் எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 மனுவில் உமா என்பவர் காயம்பட்ட நபராவார். எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 மனுவில் 3-ம் மனுதாரர் ஆவார். உமா என்பவர் இறந்து போன காமாட்சி என்பவரின் மகள் ஆவார். மேற்படி விபத்தில் தொடர்புடைய எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 மனுவில் இறந்து போன வாணி என்பவரின் மக்கள் 1 முதல் 3 மனுதாரர்கள் ஆவார். கடந்த 5.4.2023-ம் தேதி அன்று இம் மனுவின் 1-ம் மனுதாரரான உமா என்பவரும் இறந்த அவரது தாயார் காமாட்சி மற்றும் உமா குடியிருந்து வரும் பகுதியில் உள்ள ராமச்சந்திரன் என்பவரின் மனைவி வாணி மற்றும் கருப்பாயூரணியைச் சேர்ந்த மயூராதேவி ஆகியோர் காளையார் கோவிலுக்கு அருகில் கொல்லங்குடி காளியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக இரவு TN-64-R-6622 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் ஆட்டோவில் காமராஜ் சாலையை சேர்ந்த ஆனந்தகிருஷ்ணன் என்பவர் ஓட்ட 2-ம் எதிர்மனுதாரருக்கு

பாத்தியப்பட்ட ஆட்டோவை, வாடகைக்கு பிடித்து மதுரையில் இருந்து ஆட்டோவில் ஏறி கொல்லங்குடி காளி யம்மன் கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டு விட்டு 6.4.2023-ம் தேதி அன்று அதிகாலை 3-ம் எதிர்மனுதாரரான ஆனந்தகிருஷ்ணன், உமா மற்றும் காமாட்சி, வாணி ஆகியோரை ஏற்றிக் கொண்டு அதிகாலை 4.00 மணியளவில் பில்லூர் விலக்கு ரோட்டைத் தாண்டி ரோட்டு ஓரத்தில் உள்ள முனியாண்டி கோவில் அருகில் ஆட்டோவை ஆனந்த கிருஷ்ணன் என்பவர் ஓட்ட ரோட்டில் எந்தவிதமான சிக்னலும், பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் ரோட்டில் நிறுத்தியிருந்த TN-21-AX-5169 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டருடன் கூடிய இரண்டு டிரெய்லர்களில் கரும்பு ரோடு ஏற்றி இருந்த டிரெய்லரில் வலது பின்பக்கத்தில் ஆட்டோ மோதி யதில் ஆட்டோவின் முன் பகுதி சேதம் அடைந்து உமா என்பவருக்கு வலது கால் பாதத்தில் காயமும், ஆட்டோவில் பயணம் செய்த மயூரா தேவிக்கு தலையிலும், வலது கை விரலிலும் இரத்தக்காயமும், முத்தாயி என்பவருக்கு இடது தோள்பட்டையில் இரத்தக்காயமும், வாணி என்ப வருக்கு வலது கையிலும், இடது தோள்பட்டையிலும் இரத்தக் காயம் ஏற்பட்டது. காமாட்சி என்பவருக்கு வலது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டு வாயில் இரத்தம் வந்த நிலையில் மயங்கி கிடந்த ஆட்டோவை ஓட்டி வந்த ஆனந்த கிருஷ்ணன் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. அவ் வழியாக வந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி, ஆம்புலன்சில் பணிபுரிந்த மருத்துவ பணியாளர்கள் காமாட்சி என்பவரை பரிசோதித்து விட்டு இறந்துவிட்டதாக கூறினார். மற்ற நபர்களை 108 ஆம்புல்ன்ஸ் மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டது. மேற்படி விபத்திற்கு ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்த டராக்டருடன்

கூடிய இரண்டு கரும்பு லோடு ட்ரெயிலர்கள் நிறுத்தியதால் டிராக்டரின் ஓட்டுநரின் மீது சிவகங்கை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.65/2023 இ.த.ச.பிரிவுகளான 279, 337-304-ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவும் மற்றும் அஜாக்கிரதையும் காரணம் ஆகும். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 4ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்துள்ளனர். எனவே 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

3) **எம்.சி.ஓ.பி.எண்கள்.1326/2023, 1337/2023 மற்றும் 1143/2023 மனுக்களின் 4-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :-**

மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் 4-ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. 4-ம் எதிர்மனுதாரர், கடந்த 06.04.2023-ம் தேதி அன்று அதிகாலை 4.00 மணியளவில் பதிவு எண்.TN-32-F-9402 மற்றும் TN-63-H-6022 கொண்ட 1-ம் எதிர்மனுதாரரின் டிரெய்லர் களுக்கு எந்த பாலிசியும் வழங்கப்படவில்லை என்பதால் 4-ம் எதிர் மனுதாரர், மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இம் மனுவில் 4-ம் எதிர்மனுதாரர் அவசியமான தரப்பினர் அல்ல. எனவே 4வது எதிர்மனுதாரரின் பெயரை இந்த மனுவில் இருந்து விடுவிக்க வேண்டும். விபத்துக்கு 1-ம் எதிர்மனு தாரரின் பதிவு எண் TN-21-AX-5169 டிராக்டரின் ஓட்டுநரின் பொறுப்பு என்பது மறுக்கப்படுகின்றன. விபத்து நடந்த நேரத்தில் 1-ம் எதிர்மனு தாரரின் ஓட்டுநர் சரியான சிக்னல் மற்றும் சைன்போர்டு அறிவிப்புடன்

இணைக்கப்பட்ட டிரெய்லரை டிராக்டருடன் சாலையில் நிறுத்தினார் என்பதையும், மோட்டார் வாகனச் சட்டத்தின் போக்குவரத்து விதிகள் மற்றும் விதிமுறைகளைப் பின் பற்ற வில்லை என்பதையும் மனுதாரர் களே நிரூபணம் செய்ய வேண்டும். விபத்து சமயத்தில் இறந்தவர் 2–ம் எதிர்மனுதாரர் ஆட்டோவில் பயணம் செய்த நபர் ஆவார். மேற்படி ஆட்டோவின் ஓட்டுநர் மிக வேகமாகவும் அலட்சியமாகவும் ஓட்டிச் சென்று, டிரெய்லர்களுடன் இணைக்கப்பட்ட டிராக்டர் மண் சாலை, சரியான சிக்னல் மற்றும் சைன்போர்டு போடப்பட்டிருந்தது என்றும், அதை கவனிக்காமல் ஆட்டோவின் ஓட்டுநர் டிரெய்லரின் பின்புற வலது பக்கத்தில் மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது. எனவே விபத்துக்கு 2–ம் எதிர்மனுதாரரின் ஆட்டோ ஓட்டுநரின் அலட்சியம் மற்றும் கவனக்குறை வால் ஏற்பட்டது. மனு மற்றும் FIR–ல் கூறப்பட்டுள்ளபடி, விபத்துக்கு1–ம் எதிர் மனுதாரர் மற்றும் ஓட்டுநர் எந்த வகையிலும் பொறுப்பல்ல. மனுதாரர் கள் இழப்பீடு பெறுவதற்காக பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு கோரியுள்ளார்கள். இறந்து போனவரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் திறன் ஆகியவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்ட வர்கள். எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4) <u>எம்.சி.ஓ.பி.எண்கள்.1326/2023, 1337/2023 மற்றும் 1143/2023 மனுக்களின் 5–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>**

மனுவில் ஒப்பு கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் 5–ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தரப்பில் வாகனத்தின் உரிமையாளர் காப்பீட்டு செய்துள்ளார் என்பதை நிரூபிக்க கடமைப்பட்டவர். 5–ம் எதிர்மனுதாரர், இந்த மனுவில் ஒரு முறையான தரப்பினராக மட்டுமே

சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து பதிவு எண்.TN-21-AX-5169 கொண்ட 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் கவனக்குறைவு மற்றும் அலட்சியத்தால் மட்டுமே நடந்தது என்பது 5-ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப் படுகிறது. 5-ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5) இம்மூன்று வழக்குகளில் தீர்மானிக்கவேண்டியவை:-

1) விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

2)எம்.சி.ஓ.பி.எண்.1326/2023,1337/2023மற்றும்1143/2023மனுக்களின் மனுதாரர்களுக்கு யாரால் இழப்பீடு வழங்க வேண்டும்?

3)எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 மனுவின் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

4)எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 மனுவின் மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

5)எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 மனுவின் மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

6)இம்மூன்று மனுக்களின் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

6) இம்மூன்று வழக்குகளும் ஒரே விபத்து சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் ஒரு சேர விசாரணைக்கு எடுத்து கொள்ள மனுதாரர்கள் தரப்பில் கூட்டுக் குறிப்பாணை 27.01.2025-ம் தேதி தாக்கல் செய்யப் பட்டதன் அடிப்படையில் மனு எண்.1143/2023-ல் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) எம்.சி.ஓ.பி.எண்கள்.1326/2023, 1337/2023 மற்றும் 1143/2023 மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 வரையான சாட்சிகள்

விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.31 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், 4, 5 எதிர்மனு தாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 முதல் எ.ம.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப் பட்டுள்ளது. சான்றாவணமாக சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ–6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளது.

**8) பிரச்சனை 1 :–**

எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 மனுவில் மனுதாரர் உமா என்பவர் இறந்து போன காமாட்சி என்பவரின் மகள் ஆவார். எம்.சி.ஓ.பி. எண்.1337/2023 மனுவில் 1–ம் மனுதாரர் இறந்து போன காமாட்சி என்பவரின் கணவர் ஆவார், 1–ம் மனுதாரரான முருகேசன் என்பவர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார். 2 முதல் 4 மனுதாரர்கள் இறந்து போன காமாட்சி என்பவரின் மக்கள் ஆவார். எம்.சி.ஓ.பி. எண்.1143/2023 மனுவில் 1 முதல் 3 மனுதாரர்கள் இறந்து போன வாணி என்பவரின் மக்கள் ஆவார். இம் மூன்று மனுக்களும் ஒன்றாக நடத்தக் கோரி மனுதாரர்கள் தரப்பில் கூட்டுக் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என தெரிவித்ததன் அடிப்படையில் எம்.சி.ஓ.பி.எண். 1143/2023 மனுவில் சாட்சிகள் விசாரணை செய்யப் பட்டு, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) இம் மூன்று மனுக்களில் எம்.சி.ஓ.பி.எண்.1326/2023 மனுவில் காயம்பட்ட உமா என்பவர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 மனுவில் 3–ம் மனுதாரரான உமா என்பவர் இறந்து போன காமாட்சி என்பவரின் மகள் ஆவார். மேற்படி விபத்தில் தொடர்புடைய எம்.சி.ஓ.பி.எண்.1143/2023 மனுவில் இறந்து போன வாணி

என்பவரின் மக்கள் 1 முதல் 3 மனுதாரர்கள் என்பதும், ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.21 வாரிசு சான்றிதழ்களின் படி இறந்து போன காமாட்சி மற்றும் வாணி என்பவர்களின் சட்டப்படியான வாரிசுகள் என்பது தெரிய வருகிறது.

10) கடந்த 5.4.2023–ம் தேதி அன்று 1–ம் மனுதாரரான உமா என்பவரும் இறந்த அவரது தாயார் காமாட்சி மற்றும் உமா குடியிருந்து வரும் பகுதியில் உள்ள ராமச்சந்திரன் என்பவரின் மனைவி வாணி மற்றும் கருப்பாயூரணியைச் சேர்ந்த மயூராதேவி ஆகியோர் காளையார் கோவிலுக்கு அருகில் உள்ள கொல்லங்குடி காளியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக இரவு TN–64–R–6622 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் ஆட்டோவில் காமராஜ் சாலையை சேர்ந்த 3–ம் எதிர்மனு தாரரான ஆனந்தகிருஷ்ணன் ஆட்டோவை ஓட்டினார் என்றும், மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட ஆட்டோவானது 2–ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்டது என்பதும், 3–ம் எதிர்மனுதாரர், 2–ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஆட்டோவை வாடகைக்கு ஓட்டிய போது, மதுரையில் இருந்து ஆட்டோவில் ஏறி கொல்லங்குடி காளியம்மன் கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டு விட்டு 6.4.2023–ம் தேதி அன்று அதிகாலை ஆனந்தகிருஷ்ணன் ஆட்டோவை ஓட்ட உமா மற்றும் காமாட்சி, வாணி ஆகியோரை ஏற்றிக் கொண்டு அதிகாலை 4.00 மணியளவில் பில்லூர் விலக்கு ரோட்டைத் தாண்டி முனியாண்டி கோவில் அருகில் ஆட்டோவை ஆனந்த கிருஷ்ணன் என்பவர் ஓட்ட ரோட்டில் எந்த விதமான சிக்னலும், பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் ரோட்டில் நிறுத்தியிருந்த TN–21–AX–5169 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டருடன் கூடிய இரண்டு டிரெய்லர்களில் கரும்பு ரோடு ஏற்றி இருந்த

டிரெய்லரில் வலது பின்பக்கத்தில் 3—ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற ஆட்டோ மோதியதில் ஆட்டோவின் முன் பகுதியில் சேதம் ஏற்பட்டு, உமா என்பவருக்கு வலது கால் பாதத்தில் காயமும், ஆட்டோவில் பயணம் செய்த மயூராதேவிக்கு தலையிலும், வலது கை விரலிலும் இரத்தக்காயமும், முத்தாயி என்பவருக்கு இடது தோள் பட்டையில் இரத்தக்காயமும், வாணி என்பவருக்கு வலது கையிலும், இடது தோள் பட்டையிலும் இரத்தக் காயம் ஏற்பட்டது என்பதும், காமாட்சி என்பவருக்கு வலது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டு வாயில் இரத்தம் வந்த நிலையில் மயங்கி கிடந்த ஆட்டோவை ஓட்டி வந்த ஆனந்தகிருஷ்ணன் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது என்பதும், அவ்வழியாக வந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி, ஆம்புலன்ஸ்சில் வந்த மருத்துவ பணியாளர்கள் காமாட்சி என்பவரை பரிசோதித்து விட்டு இறந்து விட்டதாக கூறியதால், இறந்து போன காமாட்சி என்பவரை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு பிரேதபரி சோத னைக்காக அனுப்பி வைக்கப்பட்டார் என்பதும், மேற்படி காமாட்சி என்பவரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2—ஆகவும், வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1—ம் மனுதார ரான முருகன் என்ற முருகேசன் இறந்துவிட்டதால், 1—ம் மனுதாரரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.3—ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் 1—ம் எதிர் மனுதாரர் டிராக்டரின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் ஆவார். 1—ம் எதிர்மனுதாரரின் டிராக்டரின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநரான பெரியபாண்டி என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இம் மனுவில் 2—ம் எதிர்மனுதாரர் TN—64—R—6622 பஜாஜ் ஆட்டோவின் உரிமையாளர் ஆவார். விபத்து சமயத்தில் பஜாஜ் ஆட்டோவை ஆனந்தகிருஷ்ணன்

என்பவர் ஓட்டிச் சென்றுள்ளார் என்பது தெரியவருகிறது. விபத்தில் சம்மந்தப்பட்ட **TN–21–AX–5169** என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரின் உரிமையாளரான பெரியபாண்டி என்பவருக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளது என்பது ம.சா.ஆ.5 – ஆன ஆவணத்தின் வாயிலாக தெரியவருகிறது. 1–ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகனத்திற்கு பதிவு சான்று உள்ளது என்பது குறித்து ம.சா.ஆ.7 – ஆன ஆவணத்தின் வாயிலாக தெரியவருகிறது. **TN–21–AX–5169** என்ற பதிவு எண் கொண்ட டிராக்டருக்கு 4–ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.7–ஆவணத்தின் வாயிலாக தெரியவருகிறது. விபத்தில் சம்மந்தப்பட்ட **TN–64–R–6622** பஜாஜ் ஆட்டோவின் பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.8–ஆகவும், விபத்தில் சம்மந்தப்பட்ட ஆட்டோவானது 5–ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.9–ஆன ஆவணத்தின் வாயிலாக தெரிய வருகிறது. இம்மனுவில் 1–ம் எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட டிராக்டருடன் கூடிய இரண்டு டிரெய்லர்களில் கரும்பு லோடு ஏற்றி நின்று கொண்டிருந்த டிரெய்லரின் வலது பின்பக்கத்தில் 3–ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற ஆட்டோ மோதியதில் ஆட்டோவின் முன் பகுதி சேதம் அடைந்து உமா என்பவருக்கு காயமும், ஆட்டோவில் பயணம் செய்த மயூராதேவிக்கு இரத்தக்காயமும், முத்தாயி என்பவருக்கு இரத்தக்காயமும், வாணி என்பவருக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது என்பதும், காமாட்சி என்பவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டு வாயில் இரத்தம் வந்த நிலையில் சம்பவ இடத்திலேயே மயங்கி கிடந்துள்ளார் என்பதும், 3–ம் எதிர்மனுதாரர் ஆட்டோவை ஓட்டி சென்று மோதியதில் 3–ம் எதிர்மனுதாரரான ஆனந்த கிருஷ்ணன் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது

என்பது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் நிரூபண வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது.

11) இம் மனுவில் ம.சா.1 –யை 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "விபத்து சமயத்தில் ஆட்டோவில் எத்தனை நபர்கள் பயணம் செய்தோம் என்றால் மொத்தம் 5 நபர்கள் ஆட்டோவில் பயணம் செய்தோம். விபத்து நடக்கும் போது அதிகாலை 4.00 மணி இருக்கும். சம்பவ சாலை இரண்டு பேருந்து செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரி தான். முன்னாடி நின்று கொண்டிருந்த டிராக்டர் மற்றும் டிரைய்லரை எத்தனை அடி துரத்தில் பார்த்தேன் என்றால் நான் பார்க்கவில்லை. டிராக்டர் டிரைய்லரை வலது புறம் ஒரு பேருந்து செல்லக்கூடிய அளவிற்கு இடம் இருந்தது. நாங்கள் பயணம் செய்த ஆட்டோவின் ஓட்டுநர் முன்னால் நின்று கொண்டிருந்த டிராக்டர் மற்றும் டிரைய்லரை கவனித்து வாகனம் ஓட்டியிருந்தால் விபத்தை தவிர்த் திருக்கலாம் என்றால் சரிதான். விபத்திற்கு ஆட்டோ ஓட்டுநரின் கவனக் குறைவும் காரணம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் டிரைய்லர் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. விபத்து சமயத்தில் டிரைய்லர் காப்பீடு செய்யப்படவில்லை என்பதால் 1–ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12) ம.சா.1–யை 5–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "விபத்து நடந்த சாலை இரண்டு வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்றால் சரி தான். டிராக்டர் டிரைய்லர் ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்தததற்கு அடையாளமாக ரோட்டில் பாதுகாப்பு

உபகரணங்கள் வைக்கப்படவில்லை. டிராக்டர் மற்றும் டிரைய்லரின் லைட் எதுவும் எரியவில்லை. டிராக்டர் மற்றும் டிரைய்லர் ரோட்டில் நிறுத்தப்படாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். டிராக்டர் மற்றும் டிரைய்லர் நடு ரோட்டில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. டிராக்டர் மற்றும் டிரைய்லர் ரோட்டில் நிறுத்தப்படாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். டிராக்டர் மற்றும் டிரைய்லரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதால் அதன் காப்பீடு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப் பட்டவர்கள் என்றால் சரி தான். விபத்து சமயத்தில் ஆட்டோவில் அனுமதிக்கப்பட்ட நபர்களை தவிர்த்து அதிக நபர்கள் பயணம் சென்றார்கள் என்றால் சரியல்ல " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13) இம் மனுவில் ம.சா.2–யை "5–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது டிராக்டர் மற்றும் டிரைய்லரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதால் அதன் காப்பீடு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரி தான் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே 2–ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப் பட்ட ஆட்டோவை ஓட்டிச்சென்ற 3–ம் எதிர் மனுதாரர் அகலமான பாதையில் ரோட்டின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிரைலரின் மீது மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்பதும், மேற்படி டிராக்டருடன் கூடிய டிரைலரை நிறுத்தி வைத்திருந்த 1–ம் எதிர்மனுதாரர் எந்த விதமான சமிக்கையும் செய்யாமல் ரோட்டில் டிராக்டருடன் கூடிய டிரைலரை நிறுத்தி வைத்திருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்பதும் எனவே 1–ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவும் விபத்துக்கு காரணம் என்பதால், 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும்,

அஜாக்கிரதையும் விபத்துக்கு காரணம் என பிரச்சனை 1–க்கு தீர்வு காணப்படுகிறது.

**14. <u>பிரச்சனை 2 :–</u>**

1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ரோட்டில் டிராக்டருடன் இரண்டு ட்ரைலர்களை எந்தவிதமான சமிக்கை களோ, பாதுகாப்பு உபகரணங்களோ வைக்காமல் நிறுத்தி வைக்கப் பட்டிருந்ததால் தான் 3–ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற ஆட்டோ 1–ம் எதிர்மனுதாரரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிரைலரில் மோதி விபத்து ஏற்பட்டது என்பதும் சாட்சியத்தின் வாயிலாக தெரியவருகிறது.

15. இம்மனுவில் எ.ம.சா.1–யை மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையின் போது "பொதுவாக டிராக்டரில் எத்தனை இணைப்பு சேர்த்து செல்ல வேண்டும் என்றால் ஒரு டிரையிலரை மட்டும் இணைக்க வேண்டும். தாங்கள் தாக்கல் செய்த அறிக்கையில் 2 டிரைலரின் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான். மேற்படி 2 டிரையிலரும் ஒரே டிராக்டரில் இணைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. காவல் துறையினர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை தாக்கல் செய்ய வில்லை. வேண்டுகோள் கடிதத்தை பார்த்தால் ஒரு டிராக்டரில் 2 டிரைலர்கள் இணைக்கப்பட்டதா என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரி தான். TN–21–AX–5169 என்ற வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் கொண்ட வாகனத்தின் இன்சூரன்ஸ் நகல் இணைக்கப் பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்து சமயத்தில் இன்சூரன்ஸ் உள்ளதா என்பதை பதிவு சான்றிதழ் வைத்து சொல்ல முடியாது. நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் இன்சூரன்ஸ் இல்லை என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரி தான். டிராக்டர்

மற்றும் 2 டிரைலர்களுக்கு பெரியபாண்டி என்பவர் தான் உரிமையாளர் என்றால் சரி தான். காவல்துறையினர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் குற்றவாளி என்ற இடத்தில் பெரியபாண்டி என்பவருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனமானது 1–ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகனம் என கண்டுள்ளது என்றால் சரி தான் " என்று சாட்சியம் அளித் துள்ளார்.

16) எ.ம.சா.2–யை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "விபத்து சம்மந்தமாக டிராக்டர் உரிமையாளர் பெரியபாண்டி என்பவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். டிராக்டர் பதிவு எண்.TN–21–AX–5169 என்றால் சரிதான். அந்த டிராக்டருக்கு விபத்து சமயத்தில் இன்சூரன்ஸ் இருந்தது என்றால் சரிதான். அந்த டிராக்டர் இரண்டு டிரைய்லர்கள் உடன் இணைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இரண்டு டிரைய்லர் களிலும் விபத்தின் போது கரும்பு லோடு இருந்தது என்றால் எனக்கு தெரியும். பொதுவாக ஒரு டிராக்டருடன் ஒரு டிரைலர் மட்டுமே சட்டப்படி இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஒரு டிராக்டருடன் இரண்டு டிரைய்லர் இணைக்கப்பட்டிருந்தால் அது சட்டப்படி தவறு என்றால் சரி " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

17) இம் மனுவில் 1–ம் எதிர்மனுதாரர் தனக்குப் பாத்தியப்பட்ட டிராக் டருடன் 2 டிரைலர்களை இணைத்து கரும்புலோடு ஏற்றி ரோட்டில் நிறுத்தி வைத்துவிட்டு எந்தவித மான சமிக்கையும் செய்யாமல், பாதுகாப்பு உபகரணங்கள் ரோட்டில் வைக்காமல் இருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்பதும், 3–ம் எதிர்மனு தாரர் ஆட்டோவை வேகமாக ஓட்டி சென்று நின்று கொண்டிருந்த டிரைலரின் மீது மோதியதால் விபத்து

ஏற்பட்டு, காமாட்சி மற்றும் வாணி ஆகியோர்களுக்கு இறப்பும், உமா என்பவருக்கு காயமும் ஏற்பட்டுள்ளது. விபத்தில் ஈடுபட்ட 1–ம் எதிர் மனுதாரரின் வாகனம், 4–ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு ஊர்ஜிதத்தில் உள்ளது என்பது 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. மனுதாரர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையை 4–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டுதாரர் என்ற முறையில் இழப்பீட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்று பிரச்சனை எண்.2க்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>18) பிரச்சனை எண்.5 எம்.சி.ஓ.பி.எண்.1337/2023 : –</u>**

ம.சா.ஆ.4–ன் படி இறந்து போன காமாட்சி என்பவருக்கு 1 முதல் 4 மனுதாரர்கள் வாரிசுதாரர்கள் என்பது தெரிய வருகிறது. 1–ம் மனுதாரர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டபடியால் இறந்த காமாட்சி என்பவரின் இழப்பீடு பெற 2 முதல் 4 மனுதாரர்கள் உரிமை யுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

19) இறந்து போன காமாட்சி என்பவரின் வயது 55 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன காமாட்சி என்பவரின் வயதை காண்பிக்கக் கூடிய ஆவணமாக ம.சா.ஆ.2–ன் படி இறந்தவரின் இறப்பு சான்றிதழ் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இறந்தவரின் வயது 55 என இத்தீர்ப்பாயம் தீர்வு காணப்படுகிறது.

20) இறந்து போன காமாட்சி என்பவர் விபத்திற்கு முன்பாக சலவைத்தொழில் மற்றும் கூலி வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.12,000/– சம்பளம் பெற்று வந்தார் என மனுவில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதனை நிரூபிக்க மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே இறந்து போன காமாட்சி

என்பவருக்கு மாத வருமானமாக இந்நீதிமன்றம் ரூ.10,000/- என தீர்மானிக்கிறது.

21. இறந்து போனவரின் மாத வருமானம் ரூ.10,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. எனவே இறந்து போனவரின் வருட வருமானத்தை கணக்கிடும் பொழுது ரூ.10000/- x 12= Rs.1,20,000/- வருகிறது.

22. இறந்து போனவரின் வயது 55 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. National insurance Co Ltd., versus Pranay Sethi and others 2017(2) TNMAC 609(SC)- மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்வு முடிவின்படி மேற்படி தொகையில் 10% கூடுதல் வருமானமாக கணக்கிடப்பட்டு, **ரூ.120000+12000=ரூ.132000/-என்று** எதிர் கால வளம் என்ற தலைப்பின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகிறது.

23. இறந்து போனவரின் வயது 55 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய **Smt. Sarla Verma and Ors.v. Delhi Transport Corporation and Another-2009 (5) LW Page 561** என்ற தீர்ப்பில் கூறியுள்ள படி இறந்து போனவருக்கு பெருக்கல் குறியீடு 11 என்று நிர்ணயம் செய்யப்பட்டு, இறந்து போனவரின் வாரிசுகள் மணமானவர் களாக இருப்பதாலும், **As per judgment in C.M.A.No.538/2021 (The Oriental Insurance Co. Ltd., Vs. Arumugam and others) decided on 26.03.2021 by a Divisional Bench, for the proposition where the claimants are major married persons, the deduction towards personal expenses of the deceased should be made at 50% following the judgment of the Honourable Supreme Court in the Judgment reported in 2018(1) TN MAC 365 (The New India Assurance Co. Ltd. Vs. Vineesh Jain.)** தீர்ப்புரையின் படி இறந்து போன நபரின் சொந்த செலவிற்காக மேற்படி மொத்த தொகை ரூ.1,32,000/-லிருந்து 50 சதவீதம் பங்கான ரூ.66,000/-

கழித்தது போக இறந்து போன காமாட்சியை சார்ந்தவர்களுக்கான இழப்பீடு(1,32,000−66,000=66,000)ரூ.66,000x11=ரூ.7,26,000/− எனக் கணக்கிடப்படுகிறது. 2 முதல் 4 மனுதாரர்கள் தமது தாயாரை இழந்தமைக்காக தலா ரூ.40,000/− கிடைக்கத்தக்கது என்றும், ஈமக்கிரிகை செலவிற்காக ரூ.15,000/− மனுதாரர்களுக்கு கிடைக்கத் தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. Loss of estate ஆக ரூ.15,000/− மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.876000/−கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**<u>24. பிரச்சனை எண்.5 எம்.சி.ஓ.பி.எண்.1143/2023:−</u>**

ம.சா.ஆ.21−ன் படி இறந்து போன வாணி என்பவருக்கு 1 முதல் 3 மனுதாரர்கள் வாரிசுதாரர்கள் என்பது தெரியவருகிறது. எனவே இறந்த வாணி என்பவரின் இழப்பீடு பெற 1 முதல் 3 மனுதாரர்கள் உரிமையுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

25. இறந்து போன வாணியின் வயது 53 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன வாணி என்பவரின் வயதை காண்பிக்கக் கூடிய ஆவணமாக ம.சா.ஆ.20−ன் படி இறந்தவரின் இறப்பு சான்றிதழ் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இறந்தவரின் வயது 54 என்று தீர்வு காணப்படுகிறது.

26. இறந்து போன வாணி என்பவர் விபத்திற்கு முன்பாக மதுரையில் உள்ள மீனாட்சி பவன் ஹோட்டலில் லேபராக வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.12,000/− சம்பளம் பெற்று வந்தார் என மனுவில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதனை நிரூபிக்க மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே இறந்து போன

வாணி என்பவருக்கு மாத வருமானமாக இந்நீதிமன்றம் ரூ.10,000/− என தீர்மானிக்கிறது.

27. இறந்து போனவரின் மாத வருமானம் ரூ.10,000/− என நிர்ணயிக்கப்படுகிறது. எனவே இறந்து போனவரின் வருட வருமானத்தை கணக்கிடும் பொழுது ரூ.10000/− x 12= Rs.1,20,000/− வருகிறது.

28. இறந்து போனவரின் வயது 54 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. National insurance Co Ltd., versus Pranay Sethi and others 2017(2)TNMAC 609(SC)- மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்வு முடிவின்படி மேற்படி தொகையில் 10% கூடுதல் வருமானமாக கணக்கிடப்பட்டு, **ரூ.120000+12000= ரூ.132000/−என்று** எதிர்கால வளம் என்ற தலைப்பின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகிறது.

29. இறந்து போனவரின் வயது 54 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய **Smt. Sarla Verma and Ors.vs. Delhi Transport Corporation and Another - 2009 (5) LW Page 561** என்ற தீர்ப்பில் கூறியுள்ள படி இறந்து போனவருக்கு பெருக்கல் குறியீடு 11 என்று நிர்ணயம் செய்யப்பட்டு, இறந்து போனவரின் வாரிசுகள் மணமானவர்களாக இருப்பதாலும், **As per judgment in C.M.A.No.538/2021 (The Oriental Insurance Co. Ltd., Vs. Arumugam and others) decided on 26.03.2021 by a Divisional Bench, for the proposition where the claimants are major married persons, the deduction towards personal expenses of the deceased should be made at 50% following the judgment of the Honourable Supreme Court in the Judgment reported in 2018(1) TN MAC 365 (The New India Assurance Co. Ltd. Vs. Vineesh Jain.)** தீர்ப்புரையின் படி இறந்து போன நபரின் சொந்த செலவிற்காக மேற்படி மொத்த தொகை ரூ.1,32,000/−லிருந்து 50 சதவீதம் பங்கான ரூ.66,000/−

கழித்தது போக இறந்து போன நபரைச் சார்ந்தவர்களுக்கான இழப்பீடு(1,32,000–66,000=66,000) ரூ.66,000 x 11 = ரூ.7,26,000/– எனக் கணக்கிடப்படுகிறது. 1 முதல் 3 மனுதாரர்கள் தமது தாயாரை இழந்தமைக்காக தலா ரூ.40,000/– கிடைக்கத்தக்கது என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஈமக்கிரிகை செலவிற்காக ரூ.15,000/– மனுதாரர்களுக்கு கிடைக்கத் தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. Loss of estate ஆக ரூ.15,000/– மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வேலம்மாள் மருத்துவமனை மருத்துவ பில் ம.சா.ஆ.24 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.24–ன்படி ரூ.1,46,991/– கிடைக்கத்தக்து என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.10,22,991/–கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**30. பிரச்சனை எண்.4 எம்.சி.ஓ.பி.எண்.1326/2023:–**

விபத்தில் காயம்பட்ட உமா என்பவருக்கு 1) Right Haemopneumothorax. 2) Left Clavicle Fracture. 3) Right III, VIII Ribs Fracture. 4) Right Scapula Fracture என ம.சா.ஆ–11–ஆன ஆவணத்தின் படி தெரிய வருகிறது. ம.சா.ஆ.**11** ஆவணத்தை பரிசீலனை செய்ததில் மனுதாரர் உமா விபத்துக்குப் பிறகு தேவதாஸ் மருத்துவமனையில் **08.04.2023** முதல் **14.04.2023** வரை உள் நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளார். ம.சா.ஆ.**11** ஆவணத்தை பரிசீலனை செய்து மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டு **7** நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த விபரம் ம.சா.ஆ.**11,** மருத்துவ விடுப்பு ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேற்படி ஆவணத்தில் இருந்து மனுதாரர் உமா என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்பது தெரியவருகிறது.

31. மனுதாரர் தேவதாஸ் மருத்துவமனையில் **08.04.2023** முதல் **14.04.2023** வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி காலக் கட்டத்தில் உள்நோயாளியாக தேவதாஸ் மருத்துவமனையில் 7 நாட்கள் சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக மனுதாரருக்கு **ரூ.1,00,000/-** இழப்பீடு வழங்கப்படுகிறது.

32. மனுதாரர் விபத்து காலத்தின் போது சிகிச்சை என்ற வகையில் ஊட்ட சத்து தலைப்பின் கீழ் இழப்பீடு கோரியுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஊட்டச் சத்து உணவிற்காக **ரூ.5,000/-** வழங்கப்பட்டுள்ளது.

33. மனுதாரர் விபத்துக்கு பிறகு மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் 7 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்துள்ளார். மருத்துவமனை சென்ற பயணச் செலவுக்காக மனுதாரருக்கு **ரூ.5,000/-** இழப்பீடு பெற தகுதியுடையவர்.

34. மனுதாரர் மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் 7 நாட்கள் சிகிச்சையில் இருந்து, பிறகு தொடர்ச்சியாக ஓய்வு எடுத்திருந்தாலும், சிகிச்சையின் போது உடனிருந்த நபருக்காக 7 நாட்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு நாள் 1-க்கு ரூ.300/- வீதம் 7 நாட்களுக்கு (7x300) ரூ.2,100/- இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

35. தேவதாஸ் மருத்துவமனை மருத்துவ பில்களாக ம.சா.ஆ.12 மற்றும் ம.சா.ஆ.13 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.13-ன் படி ரூ.19,879/- மற்றும் ம.சா.ஆ.21-ன் படி ரூ.74,071/- ம் ஆக மொத்தம் ரூ.93,950/- கிடைக்கத்தக்து என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே மனுதாரர் உமா என்பவருக்கு கீழ்கண்ட வகையில் இழப்பீடு வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. வலி மற்றும் துன்பத்திற்காக | = | ரூ. | 1,00,000/- |
| 2.ஊட்டச்சத்து | = | ரூ. | 5,000/- |
| 3. உடனிருடந்த நபரின் செலவு வகைக்கு | = | ரூ. | 2,100/- |
| 4. போக்குவரத்து செலவு | = | ரூ. | 5,000/- |
| 5. மருத்துவ பில்கள் | = | ரூ. | 93,950/- |
| மொத்தம் | = | ரூ. | 2,06,050/- |

36. 1 முதல் 6 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதை தவிர மனுதாரர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என முடிவு செய்து, அவ்வாறே இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

37. **எம்.சி.ஓ.பி.எண்.1326/2023:-**

முடிவாக, மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு இழப்பீடு தொகையாக ரூ.2,06,050/- 4-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகைக்கு மனு தாக்கலான தேதியிலிருந்து (excluding the period of dismissal for default if any) தொகை செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவு தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் E-Transfer மூலம் இந்நீதிமன்ற **(Indian Bank, A/c Name: MACT Special District Judge, Madurai A/c No.VMSDJKMCOP13262023, IFSC Code: IDIB000K215**.). என்ற கணக்கில் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மேற்படி மனுதாரர் தமக்குரிய இழப்பீட்டு தொகையையும் அதற்குரிய வட்டி மற்றும் செலவு தொகையுடன் உடனடியாக பெற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3. மனு தாக்கலான நாள் 27/07/2023

**4. மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக ரூ.1433/- செலுத்த வேண்டும். மனுதாரர் ஏற்கனவே ரூ.100/- செலுத்தியது போக மீதம் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ.1333/-ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**5. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.8621/- நிர்ணயம் செய்யப்படுகிறது.**

**6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண்.** Tr.Cmp.264 to 281 of 2020 **M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and othersல் 11/5/2020அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப் படாது.**

36)எம்.சி.ஓ.பி.எண்.1143/2023:-

முடிவாக, 1 முதல் 3 மனுதார்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையாக ரூ.10,22,991/- 4-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகைக்கு மனு தாக்கலான **தேதியிலிருந்து** (excluding the period of dismissal for default if any) **தொகை** செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவு தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் E-Transfer மூலம் இந்நீதிமன்ற **(Indian Bank, A/c Name: MACT Special District Judge, Madurai A/c No.VMSDJKMCOP11432023, IFSC Code: IDIB000K215.)** என்ற கணக்கில் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும் என்றும்

உத்தரவிடப்படுகிறது.

2.மேற்படி இழப்பீட்டு தொகையில் 1–ம் மனுதாரருக்கு ரூ.340997/–ம் 2, 3 மனுதாரர்களுக்கு தலா ரூ.340997/–ம், கிடைக்கத் தக்கது என்றும், மேற்படி 1 முதல் 3 மனுதாரர்கள் தமக்குரிய தொகையையும், அதற்குரிய வட்டி மற்றும் செலவு தொகையுடன் உடனடியாக எடுத்து கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3.மனு தாக்கலான நாள்22.06.2023

**4.**மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணமாக ரூ.**9603/–** செலுத்த வேண்டும். மனுதாரர்கள் ஏற்கனவே ரூ.**200/–** செலுத்தியது போக மீதம் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ.**9403/–**ஐ **15** நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**5.** வழக்கறிஞர் கட்டணமாக ரூ.**18,730/–** நிர்ணயம் செய்யப் படுகிறது.

**6.** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2020 **M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and others**ல் **11/5/2020**அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப் படாது.

37)எம்.சி.ஓ.பி.எண்.1337/2023:–

முடிவாக, 2 முதல் 4 மனுதார்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2 முதல் 4 மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையாக ரூ.8,76,000/–4–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகைக்கு மனு தாக்கலான

தேதியிலிருந்து (excluding the period of dismissal for default if any) தொகை செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவு தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் E-Transfer மூலம் இந்நீதிமன்ற ( **Indian Bank, A/c Name: MACT Special District Judge, Madurai A/c No.VMSDJKMCOP13372023, IFSC Code: IDIB000K215**.) என்ற கணக்கில் இத்தீர்ப்பாயத்தில் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மேற்படி இழப்பீட்டு தொகையில் 2-ம் மனுதாரருக்கு ரூ.292000/-ம் 3, 4 மனுதாரர்களுக்கு தலா ரூ.292000/-ம், கிடைக்கத்தக்கது என்றும், மேற்படி 2 முதல் 4 மனுதாரர்கள் தமக்குரிய தொகையையும், அதற்குரிய வட்டி மற்றும் செலவு தொகையுடன் உடனடியாக எடுத்து கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. மனு தாக்கலான நாள்:- 27.07.2023

**4.** மனுதாரர்கள் நீதிமன்ற கட்டணமாக ரூ.**8133/-** செலுத்த வேண்டும். மனுதாரர்கள் ஏற்கனவே ரூ.**200/-** செலுத்தியது போக மீதம் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ.**7933/-**ஐ **15** நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**5.** வழக்கறிஞர் கட்டணமாக ரூ.**17,260/-** நிர்ணயம் செய்யப் படுகிறது.

**6.** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2020 **M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and others**ல் **11/5/2020**அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப் படாது.

என்னால் உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

N NAGALAKSHMI Digitally signed by N NAGALAKSHMI Date: 2025.08.12 12:31:10 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:–</u>

ம.சா.1–உமா
ம.சா.2–கனிமொழி
ம.சா.3–சீமான்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

ம.சா.ஆ.1 – விபத்து முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2 – ம.சா.1–ன் தாயாரின் இறப்புச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.3 –ம.சா.1–ன் தந்தையின் இறப்புச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.4 – வாரிசு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.5 –1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல்
ம.சா.ஆ.6 –1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வழங்கப்பட்ட வாகன பதிவுச் சான்று
ம.சா.ஆ.7 – 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 4–ம் எதிர்மனுதாரர் வழங்கிய வாகன விபத்து காப்பீடு நகல்
ம.சா.ஆ.8 –2–ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு மதுரை மத்திய வட்டார போக்குவரத்து அலவலகத்தில் வழங்கப்பட்ட வாகன பதிவுச் சான்று நகல்
ம.சா.ஆ.9 –2–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 5–ம் எதிர்மனுதாரர் வழங்கிய வாகன விபத்து காப்பீடு நகல்
ம.சா.ஆ.10 – ம.சா.1–ன் தாயாரின் இறப்பிற்கு சிவகங்கை அரசு மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட உடல்

கூராய்வு சான்றிதழ்

ம.சா.ஆ.11 –தேவதாஸ் மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி

ம.சா.ஆ.12 –08.04.2023 முதல் 14.04.2023 தேதி வரை மருத்துவமனையில் தொகை செலுத்தியதற்கு வழங்கப்பட்ட மொத்த ரசீதுகள் அசல்

ம.சா.ஆ.13 –08.04.2023 முதல் 14.04.2023 தேதி வரை மருத்துவமனை மருந்தகத்தில் செலுத்திய ரசீதுகள் அசல்

ம.சா.ஆ.14 –ம.சா.1–ன் ஆதார் அட்டை நகல்

ம.சா.ஆ.15 –ம.சா.1–ன் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.16 –2–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.17 –2–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.18 –4–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.19 –4–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.20–ம.சா.2ன் தாயார் இறப்பு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.21–வாரிசு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.22–ம.சா.2ன் தாயாரின் இறப்பிற்கு மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட உடல் கூராய்வு சான்றிதழ்

ம.சா.ஆ.23–வேலம்மாள் மருத்துவமனை டிஸ்சார்ஜ் சம்மரி

ம.சா.ஆ.24–6.04.2023 முதல் 12.04.2023 தேதி வரை மருத்துவமனை மருந்தகத்தில் செலுத்திய ரசீதுகள்

ம.சா.ஆ.25–ம.சா.2ன் ஆதார் அட்டை நகல்

ம.சா.ஆ.26–ம.சா.2ன் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.27–2–ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல்

ம.சா.ஆ.28–2–ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் நகல்

ம.சா.ஆ.29–3–ம் மனுதாரர் ஆதார் கார்டு நகல்

ம.சா.ஆ.30–3–ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் நகல்

ம.சா.ஆ.31–தேவதாஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக செலுத்திய மருத்துவ பில்களின் கன்சாலிடேட் பில்லின் நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> :–

எ.ம.சா.1 –அஜ்ரின் கரீம்

எ.ம.சா.2 –மாரிராஜ்

எ.ம.சா.3 –வித்யதரன்

எ.ம.சா.4 –பாலகண்ணன்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:-</u>

சா.சா.ஆ.1-TN-63-H-6022 வாகனத்தின் மோட்டார் வாகன
ஆய்வாளர் அறிக்கை நகல்

சா.சா.ஆ.2-TN-32-F-9402 வாகனத்தின் மோட்டார் வாகன
ஆய்வாளர் அறிக்கை நகல்

சா.சா.ஆ.3-அனுமதி கடிதம்

சா.சா.ஆ.4-TN-21-AX-5169 என்ற வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்

சா.சா.ஆ.5-வட்டார போக்குவரத்து அலுவலர் கொடுத்த அனுமதி கடிதம்

சா.சா.ஆ.6-TN-64-R-6672 என்ற எண்ணுள்ள ஆட்டோரிக்ஷா
வாகனத்திற்கான அனுமதிச் சீட்டு கணினி நகல்

N NAGALAKSHMI
Digitally signed by N NAGALAKSHMI
Date: 2025.08.12 12:31:20 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.
எம்.சி.ஒ.பி எண்1326/2023
மற்றும்
எம்.சி.ஒ.பி எண்1337/2023
மற்றும்
எம்.சி.ஒ.பி எண்1143/2023
வரைவு / செவ்வை உத்தரவு
நாள் 12.08.2025